கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: ப்பி.எஸ். லீலா அலெக்ஸ்.பி.இ.,

ந.க.11322/2018/அ6 நாள்: 25.08.2021

பொருள்:- கருணை அடிப்படையில் பணி நியமனம் - கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகு - கருணை அடிப்படையில் 17 நபர்களுக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர்களாக பணி நியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:-
1. சென்னை, முதன்மை செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதம் எண். பணி 4(1)/3156/2015 நாள் : 11.06.2018.
2. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது)(பொ)-ன் செயல்முறைகள் ந.க.11322/ 2018/ அ6 நாள்: 27.06.2018. மற்றும் 10.07.2018
3. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக கடித ந.க.11322/ 2018/ அ6 நாள்:16.02.2020 மற்றும் 16.09.2020
4. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க.11322/ 2018/ அ6 நாள்:23.012.2020.
5. அரசாணை நிலை ஆணை எண்:48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்:26.02.2021.
6. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க.11322/ 2018/ அ6 நாள்: 19.04.2021 மற்றும் 02.07.2021.
7. சென்னை கூடுதல் தலைமை செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் கடிதம் எண்:ஆ.கு3/ 18395/2020 நாள்:06.08.2021.

*******

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் கடிதத்தில் கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் நிரப்பிடும் பொருட்டு 17 காலிப்பணியிடங்கள் அங்கீகரிக்கப்பட்டு, பார்வை 2-ல் காணும் செயல்முறைகளின்படி 17 நபர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர்களாக பணிநியமனம் வழங்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்ட மேற்காணும் 17 நபர்களது பணியினை அவர்கள் பணியில் இணைந்த தேதியில் பணிவரன்முறை செய்வது தொடர்பான முன்மொழிவுகள் சென்னை வருவாய் நிருவாக ஆணையரகத்தில் 19.07.2019 அன்று நேரில் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் 17 நபர்களின் பணியினை வரன்முறை செய்திட வேண்டி முதுநிலை நிர்ணயம் செய்து முன்மொழிவுகள் பார்வை 3-ல் காணும் கடித வாயிலாக சென்னை வருவாய் நிருவாக ஆணையருக்கு அனுப்பப்பட்டு, உத்தரவுகள் எதிர் நோக்கப்பட்டன.

Scanned with CamScanner

இதற்கிடையில் பார்வை 5-ல் காணும் அரசாணையில், கருணை அடிப்படையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை பணி நியமனம் செய்யப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணியினை கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றி பணிவரன்முறை செய்திட உத்தரவிடப்பட்டது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படும்.

(5.2) பத்தி 5.1 உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள், அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(5.3) கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்த விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் பணியாளர்களை பொறுத்தவரையில், அவர்களை தற்காலிக அரசு பணியாளர்களாக கருதி நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு அவர்களுக்கு இரண்டாம் மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

(5.4) மேலே 5.3-ல் குறிப்பிடப்பட்ட அரசு பணியாளர்கள் பொருட்டு உரிய விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் கருத்துருவினை அரசிற்கு உரிய வழிமுறையாக அனுப்பப்பட வேண்டும். பின்னர் விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு குறித்த அரசாணை வெளியிடப்பட வேண்டும்.

இந்நேர்வில் சென்னை வருவாய் நிருவாக ஆணையாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பார்வை 7ல் காணும் கடிதத்தில் "02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டவர்களின் பணிவரன்முறை செய்வது தொடர்பாக கீழ்கண்டவாறு தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

1. கிராம நிருவாக அலுவலர்களுக்கு பணிநியமன அலுவலர் கோட்டாட்சியராகவும், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்களுக்கு பணிநியமன அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) என்ற நிலையில் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட அரசுப்பணியாளரின் பணியினை வரன்முறை செய்யலாம்.

Scanned with CamScanner

2. மாவட்ட ஆட்சியர் பணி நியமன அலுவலராக இருக்கும் பட்சத்தில் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் நிலையில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்யலாம்.

எனவே, பார்வை 5ல் காணும் அரசாணையின்படி, தொகுதி 4-ற்க்குட்பட்ட பணியிடமான இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடத்திற்கு பணி நியமன அலுவலரான மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)ஐ விட ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் (One level Higher than the appointing authority), அதாவது மாவட்ட வருவாய் அலுவலர் வரன்முறை செய்து உத்தரவிடலாம் என்ற அடிப்படையில் பார்வை 2ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத கீழ்க்காணும் 17 இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணியானது இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் அவர்களது பெயர்களுக்கெதிரே கலம் 4ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரன்முறைசெய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியில் இணைந்த நாள் | இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. |
| 1. | ர.ரேணுகா<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>ஆணையர் (ஒழுங்கு நடவடிக்கைகள்) அலுவலகம்,<br>கோயம்புத்தூர். | 28.6.2018 மு.ப. | 28.6.2018 மு.ப. |
| 2. | சு.கிருஷ்ணமூர்த்தி<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>எ-பிரிவு மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>கோயம்புத்தூர் | 28.6.2018 மு.ப. | 28.6.2018 மு.ப. |
| 3. | க.கார்த்திக்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>சமூக பாதுகாப்பு திட்டம்,மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>கோயம்புத்தூர். | 28.6.2018 மு.ப. | 28.6.2018 மு.ப. |

Scanned with CamScanner

| 1. | 2. | 3. | 4. |
|---|---|---|---|
| 4. | கா.முருகானந்தம்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>பொள்ளாச்சி. | 28.6.2018 மு.ப. | 28.6.2018 மு.ப. |
| 5. | கி. கார்த்திகேயன்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>ஆனைமலை. | 28.6.2018 மு.ப. | 28.6.2018 மு.ப. |
| 6. | செ.சிவராஜ்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>மதுக்கரை. | 28.6.2018 மு.ப. | 28.6.2018 மு.ப. |
| 7. | திரு.கரன்சந்த் நேரு<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>கோயம்புத்தூர் வடக்கு | 28.6.2018 மு.ப. | 28.6.2018 மு.ப. |
| 8. | அ.பவதாரணி<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>மேட்டுப்பாளையம். | 28.6.2018 மு.ப. | 28.6.2018 மு.ப. |
| 9. | ப.கிருஷ்ணகுமார்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>நகர்புற நிலவரி அலுவலகம்,<br>கோயம்புத்தூர் | 28.6.2018 மு.ப. | 28.6.2018 மு.ப. |
| 10. | கி.சிவக்குமார்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>மேட்டுப்பாளையம் | 28.6.2018 பி.ப. | 28.6.2018 பி.ப. |
| 11. | த.கவிதா<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>குடிமை பொருள் வட்ட வழங்கல் அலுவலகம், கோயம்புத்தூர் வடக்கு. | 29.06.2018 மு.ப. | 29.06.2018 மு.ப. |
| 12. | ச.கௌதம்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>சமூக பாதுகாப்பு திட்டம்,மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>கோயம்புத்தூர். | 29.06.2018 மு.ப. | 29.06.2018 மு.ப. |
| 13. | ர.சாருலதா<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,<br>கோயம்புத்தூர் வடக்கு. | 29.06.2018 மு.ப. | 29.06.2018 மு.ப. |
| 14. | சு.துளசிமணி<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>அன்னூர். | 11.07.2018 மு.ப. | 11.07.2018 மு.ப. |

Scanned with CamScanner

| 1. | 2. | 3. | 4. |
|---|---|---|---|
| 15. | ஆ.அருண்சிங்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>சமூக பாதுகாப்பு திட்டம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>கோயம்புத்தூர். | 11.07.2018 மு.ப. | 11.07.2018 மு.ப. |
| 16. | ப.சந்தோஷ்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>கோயம்புத்தூர். | 12.07.2018 மு.ப. | 12.07.2018 மு.ப. |
| 17. | கா.சதீஷ்குமார்<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>குடிமை பொருள் வட்ட வழங்கல்<br>அலுவலகம், சூலூர். | 18.07.2018 மு.ப. | 18.07.2018 மு.ப. |

மேற்காணும் அட்டவணையில் கண்டுள்ள 17 இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணிவரன்முறை தொடர்பாக தனியர்களின் பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலகத் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
கோயம்புத்தூர்.

பெறுநர்:

மேற்க்கண்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் -
தொடர்புடைய அலுவலகத் தலைவர் மூலமாக

நகல்:

1) மாவட்டஆட்சித் தலைவரின் நேர்முக எழுத்தர் (கணக்கு), கோயம்புத்தூர்.
2) தொடர்புடைய அலுவலர்கள்.

நகல் பணிந்துனுப்பப்படுகிறது:

கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாகஆணையர்அவர்கள்,
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
சென்னை 5.

Scanned with CamScanner